<u>2026 ஏப்ரல் மாதம் 28– ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 131/2025</u>

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28– ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 (LW7) – கருணாநிதி |
| தகப்பனார் பெயர்: | சின்னச்சுந்தத்தேவர் |
| ஊர்: | அனுமந்தன்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 73 |

28.04.2026

(2, 3 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சிகள் தவமணி, சுதா, ராஜேந்திரன், சுபத்ரா, ஜெயசூர்யா ஆகியோர்களை தெரியும். வழக்கில் எதிரிகளான பார்த்திபன், ராஜேந்திரன் மற்றும் விஜயாவை எனக்கு தெரியும். இந்த வழக்கில் கொலை சம்பவம் நடந்ததற்கு முன்பு சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு காலியிடம் சம்பந்தமாக இறந்துபோன சுந்தர்

அவர்களுக்கும், எதிரி ராஜேந்திரன் வகைறாவிற்கும் பிரச்சனை இருந்தது. மேற்படி பிரச்சனைக்குரிய இடம் சிறிய இடம் என்பதால் எதற்காக சண்டை சச்சரவு செய்து கொண்டிருக்கிறீர்கள், பணம் கொடுத்து முடித்துக்கொள்ளும்படி சொன்னேன். எதிரி ராஜேந்திரன் சுந்தருக்கு சுமார் ரூ.5000 அல்லது ரூ.6000 கொடுத்துவிடுவது என்று பேசினோம், இடத்தை சுந்தர் எதிரி ராஜேந்திரனுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்று பேசினோம்.

2. இருவரும் சமாதானப் பேச்சை கேட்கவில்லை. நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம் என்று கூறிவிட்டார்கள். மேற்படி கொலை வழக்கு நடந்து முடிந்த பின்பு சுமார் ஒரு மாதங்கள் கழித்து உத்தமபாளையம் காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். அப்போது இருதரப்பு தகராறில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக கேள்விப்பட்டேன். சுந்தர் மற்றும் அவரது மாமனார் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் சம்பவ சமயத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு இருதரப்பினருடன் பேசிய போது எதிரிகள் பார்த்திபன், ராஜேந்திரன் மற்றும் விஜயா பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. அனுமந்தன்பட்டியில் நான் சமூகத்தலைவர் என்றால் சரிதான். நான் கிராமத்தில் வரும் பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தை நடத்துவேன் என்றால் சரிதான். நான் ஊர்த்தலைவராக இருந்தேனா என்றால் இல்லை. பிரச்சனைக்குரிய இடம் எது என்பதை போலீசாரிடம் காட்டினேனா என்றால் இல்லை. எதிரி ராஜேந்திரன் வீடு கட்டியுள்ள இடம் என்பது இறந்துபோன சுந்தர் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கிய இடம் என்றால் சரிதான். எதிரி ராஜேந்திரன் வீட்டிற்கு வடக்குப் பக்கம் அரசாங்கத்தால் கால்வாய் கட்டிவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடம் வருவாய் ஆவணங்களில் கால்வாய் புறம்போக்கு என்று உள்ளதால் கால்வாய் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. கால்வாய் புறம்போக்கு, கம்மாய் புறம்போக்கு ஆகிய இடங்களில் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ராஜேந்திரன் இறந்த சுந்தரிடம் பதிவு கிரைய ஆவணம் மூலம் சொத்தை வாங்கினார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சுந்தருக்கும், எதிரி ராஜேந்திரனுக்கும் நான் சொன்னேன் என்றால் சரிதான். அப்படி இருந்தும் எதிரி ராஜேந்திரன் நான் பேசிய போதே இறந்துபோன சுந்தரிடம் பணம் கொடுக்க தயாராக இருந்தார் என்றால் சரிதான், ஆனால் இருதரப்பினருக்கும் இடையே தொகை சம்பந்தமாக பிரச்சனை இருந்தது.

5. நான் சொன்ன தொகையை இறந்துபோன சுந்தர் வாங்க மறுத்தார் என்றால் சரிதான். பத்திரத்தில் ராஜேந்திரன் இடத்திற்கு வடக்குப் பக்கம் கால்வாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது குறித்து எனக்கு முதன்முதலில் எப்போது தகவல் கிடைத்தது என்றால் சம்பவ தேதியன்று காலை 10.00 மணிக்கு மேல் தெரியும். அவ்வாறு தகவல் தெரிந்த போது எதிரி ராஜேந்திரன் குடும்பத்தாருக்கு காயம் ஏற்பட்டதாக கேள்விப்பட்டேனா என்றால் சாட்சி ராஜேந்திரன் குடும்பத்தாருக்கு காயம் ஏற்படவில்லை என்று சொல்லிவிட்டு, சாட்சி மீண்டும் இருதரப்பினருக்கும் காயம் ஏற்பட்டது என்று கூறுகிறார். சம்பவ தேதியிலிருந்து காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்த இடைப்பட்ட காலத்தில் வேறு காவல் அதிகாரிகள் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

6. காவல் துணைக்கண்காணிப்பாளர் விசாரித்தபோது இருதரப்பினருக்கும் காயம் ஏற்பட்டதை நான் கூறினேன் என்றால் சரிதான். அதை காவல் துணைக்கண்காணிப்பாளர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும்போது குறிப்பிட்டு எந்த தேதியில் பஞ்சாயத்து நடந்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். புகாருக்கு முன்பு எப்போது நான் பார்த்திபனை பார்த்தேன் என்பது குறித்து

குறிப்பிட்டு போலீசார் என்னிடம் கேட்டார்களா என்றால் இல்லை. பார்த்திபன் பஞ்சாயத்தில் கலந்து கொண்டார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு இடம் சம்பந்தமாக பஞ்சாயத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் இறந்துபோன சுந்தருக்கு உறவினர் என்றால் இருதரப்பினருக்கும் நான் உறவினர் ஆவேன்.

**மறு விசாரணை** :– சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு இடம் பிரச்சனை சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்த போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் பால்ச்சாமி த/பெ.வைரத்தேவர், ராசு த/பெ.முத்துக்கருப்பத் தேவர் ஆகியோர்கள் பஞ்சாயத்தில் இருந்தார்கள், ரமணி என்பவரும் இருந்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

7. எல்லோரையும் ஒன்றாக காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்தப்போது முதன்முதலில் பஞ்சாயத்து குறித்து கூறினேன் என்றால் சரிதான். நாங்கள் நான்கு பேரும் பேசும்போது, உடனிருந்த மற்றவர்களும் பத்திரத்தை பார்த்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் எல்லோரும் பத்திரத்தின்படி நடந்து கொள்ள இருதரப்பினரையும் அறிவுறுத்தினோம் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்போது ஒரு வாரத்திற்கு முன்பு இடம் சம்பந்தமாக சமரசம் நடந்ததாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 28.04.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.28 17:59:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
28.04.2026